தமிழ்நாடு அரசு

சுருக்கம் (167) (41) (165)

மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் தற்போதைய கடன் சுமையை
கை பின்பற்ற வேண்டிய வழிமுறைகளுக்கு ஒப்புதல்– மாநகராட்சிகள்
நகராட்சிகள் செலுத்த வேண்டிய கடன் நிலுவைக் கணக்குகளை வருங்-
த்தில் பராமரிக்கவும் கண்காணிக்கவும் தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும்
படை வசதி மேம்பாட்டுக் கழகத்திலிருந்து நகராட்சி நிர்வாக
யாளருக்கு மாறுதல் செய்தல்–ஆணைகள்–வெளியிடப்படுகின்றன.

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (நநி–3) துறை

அரசாணை (நிலை) எண்.120

நாள் 10.7.98

பார்வை:

1, 20.5.97 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (தேர்தல்–2) துறை, அரசாணை நிலை எண்.127.
2. 12.1.98 நாளிட்ட தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம் லிட் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரது கடிதம் டுபிட்கோ/எல்ஏ/ஜெஎ97.
3. 2.2.98 நாளிட்ட நிதி (வரவு–செலவு ஒருங்கிணைப்பு–2) துறை கடித எண்.68242/பி.கோ.ஆர்ட்2/97–14,
4, 25.3.98 நாளிட்ட நகராட்சி நிர்வாக ஆணையரது ந.மு.க.எண்.10543/98–அந1.

....

1994–ம் ஆண்டு அமைக்கப்பட்ட தமிழ்நாடு மாநில நிதிக்குழு
.96 அன்று அரசுக்குக் கொடுத்த தனது அறிக்கையில், நகர்ப்புற
ட்சி அமைப்புகளின் நிதிகளை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை அளித்தது.
புற உள்ளாட்சி அமைப்புகளின் தற்போதைய கடன்கள் பற்றிய நிலைமைகள்
இந்தக் கடன்களை எவ்வாறு அவை திரும்பச் செலுத்துவது போன்றவை
ம் தமிழ்நாடு மாநில நிதிக்குழு குறிப்பிட்ட ( Specific ) பரிந்துரைகள்
செய்யவில்லை. எனவே, பார்வை1*ல் படிக்கப்பட்ட அரசாணையில்
றித்து ஆராய்ந்து அரசுக்கு ஒரு அறிக்கை சமர்ப்பிக்க ஒரு குழுவினை
அமைத்தது.

2, மேற்படி குழு 18.2.98 அன்று அரசுக்கு அளித்த அறிக்கையை
கவனமுடன் பரிசீலித்து பின்வரும் ஆணைகளைப் பிறப்பிக்கின்றது..

.4,98–வரை குடிநீர் திட்டங்களுக்காக பெறப்பட்ட ஆயுள் காப்பீட்டுக்
கடன் உட்பட, அரசு மூலமாக பெறப்பட்ட எல்லாக் கடன்களும், அரசுடன்
தொகையையும் சேர்த்து ஒரே கடன் தொகையாக தொகுக்கப்பட வேண்டும்.

.4.98–வரையிலான நகராட்சி கடன் கணக்கினை, உள்ளாட்சி நிதித்
இயக்குநர் சரிபார்த்து, மேற்படி இனங்களுக்கான, வட்டித்தொகை
கடன் நிலுவைகள், குறித்த அறிக்கையை கூடிய விரைவில் நகராட்சி
ஆணையருக்கு அனுப்ப வேண்டும்.

.4.98 முதல் அரசு கடன்கள் அனைத்தையும் கண்காணிக்கவும், வசூலிக்கவும்
நிர்வாக ஆணையர் அதிகாரம் பெற்றவராவார். தமிழ்நாடு நகர்ப்புற
மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம் 31.3.98–ம் தேதிய நிலையில்
ட்சி மற்றும் நகராட்சிகள் செலுத்த வேண்டிய கடன் நிலுவைக் கணக்குகளையும்
98–க்குப்பின் வசூலிக்கப்பட்ட தொகையினையும் நகராட்சி நிர்வாக ஆணையாளருக்கு
ற்கு நடவடிக்கை எடுக்குமாறு கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக
கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஈ) கடன் நிலுவைகளைக் கணக்கிடுவதற்கு முன், மாநகராட்சிகள்/நகராட்சிகள் குறித்த காலக்கெடுவுக்குள் பணம் செலுத்த நகராட்சி நிர்வாக ஆணையர் தனித்தனியே கேட்பு அறிக்கை (Individual Demand Notice ) அனுப்புவதுடன் கடன் செலுத்தியிருந்தால் அதன் விவரங்களையும் தெரிவிக்குமாறும் அத்துறை கேட்டுக் கொள்ள வேண்டும். [நிலுவைத் தொகை உறுதி செய்யுமாறும், கடன் நிலுவைத் தொகைக்கான கடன்]

(உ) ஆண்டுதோறும் மார்ச் செப்டம்பர் ஆகிய மாதங்களில் அரையாண்டு தவணைகளாக 20 ஆண்டுகளில் 1.4.98-வரையிலான தொகுக்கப்பட்ட மொத்த கடன் தொகையை மாநகராட்சிகள்/நகராட்சிகள் திருப்பிச் செலுத்த வேண்டும். கடன் தொகைக்கு 13.5% என்ற அடிப்படையில் வட்டி செலுத்த வேண்டும். மாநகராட்சிகளோ, நகராட்சிகளோ செப்டம்பர் மற்றும் மார்ச் மாதங்களில் தவணைத் தொகைகளை செலுத்த தவறினால் நிதிப் பங்கீட்டின் கீழ் (Devolution) அக்டோபர், ஏப்ரல் மாதங்களில் விடுவிக்கப்பட வேண்டிய தொகையிலிருந்து நகராட்சி நிர்வாக ஆணையர் பிடித்தம் செய்ய வேண்டும்.

(ஊ) கடன்களை திருப்பிச் செலுத்த இயலாத நிலையில் உள்ள மாநகராட்சிகள்/நகராட்சிகளைப் பொறுத்தவரை அவை தமது சொந்த வருவாயைப் பெருக்க எடுத்த நடவடிக்கைகளை மதிப்பிட படிவம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும்.

(எ) எந்தெந்த நகராட்சிகளின் கடன்களை ரத்து செய்ய பரிந்துரை வழங்கப்படுகின்றதோ அவற்றின் செலவினங்களைக் கட்டுப்படுத்த கடுமையான நடவடிக்கைகள் தொடங்குவதுடன், கடன்களை ரத்து செய்வதற்கு முன்நடவடிக்கையாக சொந்த வருவாயைப் பெருக்கும் ஒரு செறிவுத் திட்டத்தினை ( package of measures) முன்நிபந்தனையாக ஏற்று செயல்படுத்த வேண்டும்.

(ஏ) மேலும், ஒவ்வோராண்டும் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் கடன் நிலுவையை ரத்து செய்வதற்கு அரசிற்கு பரிந்துரைகள் வழங்க நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை செயலர் தலைமையில் நகராட்சி நிர்வாக ஆணையரையும், நிதித் துறையின் பிரதிநிதி ஒருவரையும் உறுப்பினர்களாக கொண்ட குழு ஒன்று அமைக்கப்படுகிறது.

(ஐ) மேற்குறிப்பிடப்பட்ட இனங்களின் அடிப்படையில் அனைத்து நகராட்சிகள் மற்றும் சென்னை நீங்கலாக இதர மாநகராட்சிகளுக்கும் சீராய்வு செய்யப்பட்ட நிதிநிலை விவர அறிக்கை (cash flow statement ) தயார் செய்யப்பட வேண்டும். இவ்வறிக்கை நகராட்சி நிர்வாகத்துறைக்கு மாநில நிதி ஆணையம் நிதிப் பங்கீட்டில் 25% அதிகரிப்பு என்ற எதிர்பார்ப்பின் அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டும்.

(ஒ) அரசுக்கு கடன்களின் நிலை குறித்த ஆண்டறிக்கை ஒன்றினை அரசிற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அனுப்ப வேண்டும்.

(ஓ) மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் கடன் நிலுவைகளை கண்காணித்தல் மற்றும் வசூலித்தல் பொறுப்பை மேற்கொள்ளத் தேவைப்படும் பணியிடங்களை தோற்றுவிப்பது குறித்து தனியாக பரிசீலித்து ஆணைகள் வெளியிடப்படும்.

3, இவ்வாணையின் பிரதியினை தமது கட்டுப்பாட்டுக்குள் உள்ள அனைத்து கள அலுவலர்களுக்கும் அனுப்புமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. இவ்வாணை 9.7.98-நாளிட்ட அ.சா.கு.எண்.270/கூ...-98ல் பெறப்பட்ட நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகின்றது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஒம்/- எல்.மாலதி,
அரசு செயலாளர்.

// உண்மை நகல் //